# <u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நத்தம்.</u>

| | | | |
|---|---|---|---|
| அ.வ.எண். | : 4/2023 | வா.சா. | : 1 |
| பெயர் | : செல்வம் | த/பெ. | : முத்தையா |
| தாலுகா | : நத்தம் | கிராமம் | : பள்ளபட்டி |
| தேதி | : 28.04.2025 | வயது | : 53/2025 |

1969–ம் வருடத்திய வகைமுறைச்சட்டம் பிரிவு .44–ன் படி சாட்சி அழைக்கப்பட்டு உறுதியுரை செய்யப்பட்டு அளித்த சாட்சியம்

சாட்சியம் பதிவு செய்யப்பட்ட நேரம் – 11.04 A.M. to 11.22 A.M.

<u>வாதிகள் தரப்பில் முதல் விசாரணை தொடர்ச்சி:</u>

1. நான் இவ்வழக்கின் வாதி ஆவேன். நான் இவ்வழக்கை பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் சொல்லப்பட்டுள்ள ஆவணங்களை வாதிகள் தரப்பு சான்றாவணங்களாக குறியீடு செய்ய இன்றைக்கு வாய்தா ஏற்பட்டுள்ளது. எனவே, அதனை ஏற்றுக்கொண்டு வாதி தரப்பு ஆவணங்களாக குறியீடு செய்ய வேண்டுகிறேன்.

1) 17.09.2020**ம் தேதியிட்ட 1ம் வாதியின் பெயரில் ஏற்பட்ட** G.R.**பட்டா – நகல்** (**பட்டா எண்**.228) – **வா.சா.ஆ.**1 **ஆகவும்,**

2) 18.03.2020, 26.03.2013, 14.02.2018 **தேதிகளில் 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட வீட்டுவரி ரசீது – அசல்** (**எண்ணிக்கை** –8) – **வா.சா.ஆ.**2 **ஆகவும்,**

3) 20.05.2022**ம் தேதியிட்ட பாப்பாப்பட்டி கிராம நிர்வாக அலுவலர் வழக்குச் சொத்திற்கு 1ம் வாதியின் பெயரில் வழங்கிய சான்று – அசல் – வா.சா.ஆ.**3 **ஆகவும்,**

4) 20.05.2022ம் தேதியிட்ட பண்ணுவார்பட்டி கிராமம் சர்வே எண்.170/10ற்கு 1ம் வாதியின் பெயரில் வழங்கிய அடங்கல் பதிவேடு – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.4 ஆகவும்,

5) 25.05.2022ம் தேதியிட்ட 1ம் வாதி, 2ம் வாதிக்கு எழுதிக்கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரம் – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.5 ஆகவும்,

6) 21.05.2022ம் தேதியிட்ட பண்ணுவார்பட்டி கிராமம் சர்வே எண்.170/10ற்கு வழங்கப்பட்ட புல வரைபடம் – சான்றிட்ட நகல் – – வா.சா.ஆ.6 ஆகவும்,

7) 04.01.2023ம் தேதியில் 1ம் வாதி, நத்தம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு – கைநகல் – வா.சா.ஆ.7 ஆகவும்,

8) 19.01.2023ம் தேதியில் 1ம் வாதி, நத்தம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு – கைநகல் – வா.சா.ஆ.8 ஆகவும்,

9) 22.01.2023ம் தேதியில் 1ம் வாதி, நத்தம் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு மீது பதியப்பட்ட முதல் தகவல் அறிக்கை – சான்றிட்ட நகல் – வா.சா.ஆ.9 ஆகவும்,

10) 1ம் வாதியின் ஆதார் சான்று அட்டை – ஒப்பீட்டு நகல் – வா.சா.ஆ.10 ஆகவும்,

11) 25.02.2023, 06.03.2021, 06.03.2019, 04.12.2023 தேதிகளில் 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட வீட்டுவரி ரசீது – அசல் மற்றும் இணையதள பதிவிறக்க நகல் (எண்ணிக்கை –5) – வா.சா.ஆ.11 ஆகவும்,

12) 04.03.2022 தேதியிட்ட சர்வே எண்.170/10ற்கு 1ம் வாதி பெயரில் ஏற்பட்ட நத்தம் பட்டா (பட்டா எண்.228) இணையதள பதிவிறக்க நகல் – வா.சா.ஆ.12 ஆகவும்,

13) 04.03.2023ம் தேதியிட்ட இடிக்கப்பட்ட வீட்டிற்கான சேத மதிப்பு சான்றிதழ் – அசல் – வா.சா.ஆ.13 ஆகவும்,

14) 10.04.2025ம் தேதியிட்ட வா.சா.ஆ–1 ஆவணம் அசல் 1ம் வாதியின் வங்கியில் இருப்பதற்கு வழங்கப்பட்ட சான்று – அசல் – வா.சா.ஆ.14 ஆகவும் குறியீடு செய்ய வேண்டுகிறேன். பிராதுப்படி தீர்ப்பாக வேண்டுகிறேன்.

**மேற்கண்ட ஆவணங்கள் வா.சா.ஆ.1 முதல் 14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு சாட்சி சரி என்று ஒப்புக் கொண்டு என் முன்னிலையில் 28.04.2025 கையெழுத்து செய்துள்ளார்.

M.Nallakannan., B.Com., B.L.,
Digitally signed by M.Nallakannan., B.Com., B.L., Date: 2025.04.28 14:42:17 +0530

மா.உ.ம.நீ.நடுவர், நத்தம்.